மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.53/2023

வாக்குமூலம்: வா.சா.1 தங்கமுத்து

06.02.2024: சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமானத்தின்பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :– 13.11.1931ம் தேதிய பாகவிஸ்தி பத்திரத்தின்படி என் தாத்தாவுக்கு எந்த பகுதி ஒதுக்கப்பட்டது என்றால் தெற்கு, கிழக்கு மேற்கு பகுதி ஒதுக்கப்பட்டது. அதன் நான்குமால் தெற்கு கிழமேல் வீதி, மேற்கே தென்வடல் வீதி, கிழக்கே தென்வடல் சந்து. வடக்கே பிரதிவாதிகள் நிலம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாத்தாவின் பாகவிஸ்தியில் எந்த பகுதி என்று காட்டப்பட்டுள்ளது என்றால் மேற்சொன்னவாறு காட்டப்பட்டுள்ளது. பொதுவில் பாதி என்றுதான் காட்டப்பட்டுள்ளது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளின் தாத்தாவுக்கு சரிபாதியும், என் தாத்தாவுக்கு சரிபாதியும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் குடியிருந்து வரும் வீட்டின் சர்வே எண் என்னவென்றால் 751/5. நான் தாவாவில் சொல்லியுள்ள வீடு ஓட்டு வீடு என்றால் சரியல்ல. அதில் ஓட்டு வீடு மற்றும் லாகட வீடு சேர்ந்துதான் உள்ளது. சர்வே எண்.751/5ல் உள்ள வீட்டை நானும் என் தாத்தாவும் 100 ஆண்டுகளாக அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் பாகவிஸ்திக்கு முன்பாக இருந்து தாவா சொத்தை அனுபவித்து வருவதால் அவ்வாறு சொல்லியுள்ளேன். தாவாச்சொத்தை நானும் என் தாத்தாவும் 100 வருடங்களாக அனுபவித்து வருவதாக சொல்வதற்கு நான் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டாதான் உள்ளது. என் தாத்தா தங்கமுத்து கவுண்டரின் இறப்பிற்குப்பின் முத்தம்மாள், முத்துரத்தினம், தேவாத்தாள் ஆகியோர் அனுபவம் செய்து வருவதை நிரூபண செய்ய ஆவணங்கள் ஏதேனும் உண்டா என்றால் அவர்கள்தான் அனுபவம் செய்து வந்தார்கள். என் அத்தை தேவாத்தாள் இதே நீதிமன்றத்தில் என் அப்பா மீது பாகவிஸ்தி வழக்கு போட்டு, தீர்ப்பாணதின்பேரில் பாகத்தை பிரிக்க ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா என்றால் பாகம் அனைத்தையும் பிரித்துக்கொண்டார்கள். என் அப்பாவுக்கு வீடு ஒதுக்கப்பட்டது. என் அத்தை வீடு வேண்டாம் என்றார். அதற்கு ஏதேனும் ஆவணம் ஏற்படுத்திக்கொண்டோமா என்றால் வாய்மொழியாகத்தான் பாகம் செய்து கொண்டார்கள். பூமி மட்டும் பதிந்து கொடுக்கப்பட்டது. பிரதிவாதியின் வீடு சர்வே எண்.751/5 உடன் ஒட்டி வருகிறது என்றால் சரியல்ல. நீளமாக ஒட்டி வரும் வீட்டிற்கு நான் பங்கு

கேட்கவில்லை என்றால் சரிதான். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. சர்வே எண்.751/5 மற்றும் 751/6 ஒட்டி தென்புறமாக உள்ளது. அதை ஒட்டியே சிமிண்ட் சீட் அமைக்கப்பட்டுள்ளது என்றால் அது எங்கள் அனுபவத்தில்தான் உள்ளது. தாவாச்சொத்து எது என்றே எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.751/5–க்கு மின் இணைப்பு எங்கிருந்து வருகிறது என்றால், அது தனி மின் இணைப்பு. எங்கள் வீட்டின் வீட்டு வரி ரசீதின் எண்.3/107. அது வா.சா.ஆ.11 என்றால் சரிதான். பிரதிவாதிகளின் தாத்தா 1941ல் ஒரு பாகப்பிரிவினை செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பின்பு சர்வே எண்.751/5–ன் ஒரு பகுதியை மாரப்பகவுண்டர் பிரதிவாதிகளின் தந்தைக்கு கிரையம் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.751/5ன் ஒரு பகுதியை பழனிச்சாமி கவுண்டர் மாரப்பகவுண்டருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சர்வே எண்.751/5 முழுக்க எங்கள் சொத்து. 1941 பாகவிஸ்தி பத்திரம் மற்றும் 1956 கிரையப்பத்திரம் இரண்டிலும் என் தாத்தா தங்கமுத்து கவுண்டர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் நான் பிறக்குமுன்பே என் தாத்தா இறந்துவிட்டார். அதனால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரிக்கப்படாத மொத்த சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் அளந்து பார்த்துத்தான் சொல்லமுடியும். 1931 பாகவிஸ்தி பத்திரத்தில் எங்கள் இருவர் குடும்பத்திற்கும் மொத்த விஸ்தீரணம் 2700 சதுரடி என்றும், அதில் சரிபாதி 1350 சதுரடி இடம் இருவருக்கும் என்றுதான் உள்ளது. நான்குமால் குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி தெரியாது. நான் பட்டாப்படி பாகம் கேட்கிறேனா அல்லது 1931ம் வருட பாகவிஸ்தி பத்திரப்படி பாகம் கேட்கிறேனா என்றால், நாங்கள் வாழ்ந்த வீட்டிற்கு நாங்கள் வழக்கு போட்டு கேட்டுள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் மொத்த விஸ்தீரணம் 327 சதுரடி என்றால் சர்வே எண்.751/5 முழுவதும் எங்களுக்கு பாத்தியப்பட்டது. விஸ்தீரணம் தெரியாது. மேற்கு, தெற்கு, கிழக்கு சரி. வடக்கு பக்கம் வீதி வரும். பிரதிவாதி வீடு வரும். நான் குடியிருக்கும் சர்வே எண்.751/5 இடத்திற்கு அடுத்து என்னுடைய இடம்தான் உள்ளது என்றால் மொத்த இடமும் என்னுடையதுதான். பிராதில் நான் சொல்லியுள்ள நான்குமாலே தவறு என்றால் சரியல்ல. நான் சரியாகத்தான் சொல்லியுள்ளேன். 16.11.1990ம் தேதி தாவா சொத்துக்கு என் தாந்தையார் பெயரில் பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.751/5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதால் வருவாய்த்துறையில் பிரதிவாதிகள் பட்டாவை ரத்து செய்ய மனு செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அதில் விசாரணை முடிந்து உத்தரவு

போட்டார்களா என்றால் பலமுறை வந்து அளந்தார்கள். எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. அதனால்தான் நான் நீதிமன்றத்தை நாடியுள்ளேன். வருவாய்த்துறையில் எந்த உத்தரவும் பிறப்பிக்குமுன்பே நான் நீதிமன்றத்தை நாடியுள்ளேன் என்றால் சரியல்ல. அவர்கள் ஒத்துழைக்காததால்தான் நான் நீதிமன்றத்தை நாடியுள்ளேன். வருவாய்த்துறையில் உத்தரவு பிறப்பித்தபின்பு மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்ய முடியும் என்றும், அதற்கு முன்பே நான் நீதிமன்றத்தை நாடிவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. சர்வே எண்.751/5, 751/6 ஆகிய இரண்டும் ஒரே நீளமான ஓட்டு வீடு என்றும், நான் தவறாக வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதிகளின் வீட்டை அபகரிக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> 1,2 பிரதிவாதிகள் பட்டாவை ரத்து செய்ய மனு செய்ததன் அடிப்படையில்தான் 3, 4 பிரதிவாதிகள் முறையான விசாரணை மேற்கொண்டார்கள் என்றும், அதை தாமதப்படுத்தத்தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.366/1966 வழக்கில் 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை</u> இல்லை.

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K KARTHIK

Digitally signed by K KARTHIK
Date: 2024.02.06 11:53:44 +0530

District Munsif,

Palani.